1971 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

7. திரு. கே. டி. கே. தங்கமணி.
8. திரு. ஏ. ஆர். பெருமாள்.
9. திரு. திருப்பூர் ஏ. எம் மொய்தீன்.
10. டாக்டர் எச். வி. ஹாண்டே.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ஈ. எஸ். தியாகராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

அலுவல் ஆய்வுக் குழுவின் முதல் கூட்டம் இன்று பகல் 11 மணிக்குப் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும்.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை அறிமுகம் செய்ய குடியரசுத் தலைவர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதா.

தமிழ்நடு 1971-ம் ஆண்டு நகர-நட்டுப்புற அமைப்பு மசோதா

மாண்புகுமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு,அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவையுரிமைக் குழுவிற்கு பதினைன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க கல்வி—வருவாய்த் துறை அமைச்சர் தீர்மானம் கொண்டு வருவார்கள்.